**தலைப்பு 333 – கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வுகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 6 ஆம் இலக்க வழிகாட்டல் | காசுப் பாய்ச்சல் கூற்றில் பணத்தை செலவழித்தலின் கீழ் தனிப்பட்ட சம்பள செலவினம் ரூபா 29,708,387 ஆக இருந்த போதும் வேறு செலவினத் தலைப்பு களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 167,344 என காண்பிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தனிப்பட்ட சம்பள செலவினம் ரூபா 29,875,732 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் தேர்தல் கொடுப்பனவாக செலுத்திய ரூபா 167,344 தொகையே வேறுபாடு என்பதாகவும் இந்த அலுவலகத்திற்குரிய கட்டுநிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 167,344 தொகையான காசு உட்பாய்ச்சல் இடம் பெற்றுள்ளதால் அது காசுபாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் கொடுப்பனவு வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |

**2.2 முற்பண வழங்கலும் தீர்ப்பனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டில் முற்பண அறவீடு ரூபா 2,164,817 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 1,311,927 எனக் காண்பிக்கப்பட்டமையால் காசு உட்பாய்ச்சல் ரூபா 852,890 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் முற்பண அறவீடுகளின் பெறுமதி ரூபா 2,164,817 என்பதாகவும் அப்பெறுமானத்தில் ரூபா 1,311,927 தொகை பணமாக அறவிடப்பட்டுள்ளதாகவும் ரூபா 852,890 தொகை குறுக்கு பதிவின் மூலம் அறவிடப்பட்டுள்ளதாக அதில் காசு உட்பாய்ச்சல் இடம்பெறவில்லையென்பதால் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | வழிகாட்டலின் பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டில் முற்பண கொடுப்பனவு ரூபா 1,957,777 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 1,499,501 எனக் காண்பிக்கப்பட்டது. ஆதலால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 458,276 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் முற்பண கொடுப்பனவு பெறுமதி ரூபா 1,957,777 எனவும் அப்பெறுமதியில் ரூபா 1,499,501 தொகை பணமாக கொடுப்பனவாக செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு முற்பண கடனாக ரூபா 458,276 தொகை குறுக்கு பதிவு மூலம் முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தொகை உட்பாய்ச்சல் ஒன்று இடம்பெறவில்லையன்பதால் அப்பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை யென அறிவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி – |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரசிற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் அறிக்கையிடுவதற்காக மத்தியப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்காக புதிய மென்பொருளொன்றை ஆரம்பித்தலின் *விளைவு* மட்டம் 50 -74 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவாகும். | குறித்த மென்பொருளை தயாரித்தல் ITMIS செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் செயற்பாடுகளை மிக விரைவில் மேற்கொள்ள வேண்டுமென பல வேண்டுகோள்கள் மேற்கொள்ளப்பட்டு பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் அச்செயற்பாடுகளை துரிதப்படுத்தல் இந்த அலுவலகத்தின் கட்டுபாட்டிற்கு அப்பால் உள்ளதாக | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுப்பதன் தேவைப்பாடு. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 அதாவது 19 சதவீதம் வெற்றிடங்கள் நிலவியதுடன், அவற்றுள் 03 பதவிகள் சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் ஆகும். | வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட மட்டத்தின் 03 வெற்றிடங்களில் ஒன்று உதவிப் பாளர் பதவியொன்றுக்காக பதில் கடமை அடிப்படையில் கடமை நிறைவற்றப்படுவதுடன் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தில் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அலுவலகத்தில் போதிய இடவசதி இல்லாமை காரணமாக | இந்த வகையில் பதவியணியனர் வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கமளிக்கும் எனின், அந்த வெற்றிடங்களினை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு இல்லையெனின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு |

இருப்பதாகவும் முகாமைப்படுத்த முடியுமென இனங்காணப்பட்ட மற்றும் இதற்கு முன்னர் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்ட 03 வெற்றிடங்களை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.